THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 23rd August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the Clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Floods

* *S.N.Q. No.* 11.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the precautionary steps taken by the Government regarding the recent floods in the Cauvery;

(*b*) the nature and extent of damage caused by the floods;

(*c*) the immediate and long-time relief measures taken by the Government; and

(*d*) whether Central aid has been demanded to carry out flood prevention measures in the Cauvery?

THE HON. SRI P. KAKKAN : (*a*) to (*d*) : The attention of the hon. Member is invited to the Comprehensive Statement [a] on floods placed on the table of the House.

DEPUTY SPEAKER : I think Starred Question No. 12 may be taken up and answered.

* *S.N.Q. No.* 12.—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Coleroon breached at Koiladi near Kallanai and the floods entered into the Cauvery; the details thereof;

(*b*) the reason for the breaches; and

(*c*) whether it is a fact that the breaches are due to the indifference and slackness of the Public Works Department?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The attention of the hon. Member is invited to the statement [b] on floods in the Cauvery placed on the table of the House to-day.

(*c*) No, Sir.

SRI N. K. PALANISAMI : I suggest that the discussion on this subject may be taken up to-morrow.

SRI M. KALYANASUNDARAM : I also support the suggestion and request that it may be considered.

---

a Printed as Appendix I on pages 729–733 infra.
b Printed as Appendix II on pages 734–753 infra.

[23rd August 1961

SRI S. LAZAR : I suggest that the question may be taken up to-day itself and finished.

DEPUTY SPEAKER : If the hon. Member wants, I have no objection.

SRI S. LAZAR : I may not be here tomorrow, Sir. I want to have the discussion to-day itself.

DEPUTY SPEAKER : It would be better to have the discussion on the flood situation on the 25th. Now I will allow the hon. Members to put some supplementaries on the questions.

SRI T. SAMPATH : I may not also be in the City on the 25th.

DEPUTY SPEAKER : The hon. Member is expected to be here.

SRI M. KALYANASUNDARAM : Presence or absence of an hon. Member cannot be the main consideration. The importance of the question, details placed before us, etc., should be the main consideration.

DEPUTY SPEAKER : This question and the Short Notice Question might be taken up tomorrow.

THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர்களுடன், கட்சித் தலைவர் அவர்களும் கலந்து பேசி, ஷார்ட் நோட்டீஸ் கேள்வியின் மேல் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையை வைத்துக்கொண்டு, அதன் பேரில் பொது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். அதனாலே, கேள்வியாக இருந்தாலும், எல்லாவற்றையும் அன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்து கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : I think the hon. Member will agree with the views expressed by the Hon. Minister. We can have the discussion on the flood situation on the 25th August. In the meantime, the hon. Members can go through the statements placed on the table. So the discussion on the subject will be taken up on the 25th. Now we will proceed with the Short Notice Question as far as possible.

SRI S. LAZAR : ஸார், இந்த வெள்ளத்தை அடிப்படையாக வைத்து, ஜோடர்பாளையத்திலிருந்து பிரித்து. திருச்சி தென்னாற்காடு மாவட்டங்களுக்கு தண்ணீர் கொடுப்பதற்கான திட்டத்தை துரிதப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதைப்போல், வேறு ஒரு அணையை மேட்டூருக்கு அடுத்து மேலோ கீழோ கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா?

23rd August 1961]

THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்துள்ள அறிக்கையிலே 4-வது, 5-வது பக்கங்களைப் படித்தால் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்வதற்கான பரிசிலனைகள் செய்ய இருக்கிறோம் என்ற விவரம் தெரியும். ஆகவே அதைப்பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. LAZAR : ஸார், இந்த வெள்ளம் வருவதற்கு முன்னாலும், வருகின்றபொழுதும் தக்க சமயத்திலே முன்னெச்சரிக்கை செய்யாததினால், அங்குள்ள அதிகாரிகளும், பொதுமக்களும் இரவு பகலாக வேலை செய்து வந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதேபோல் வேலை செய்துவந்த ஒரு என்ஜினியர் சற்று அயர்ந்துவிட்டதால், அவருடைய கார் ஒரு மரத்தில் மோதப்பட்டு சேதம் அடைந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே இதைப்போல் அந்த சமயத்தில் வேலை செய்த அதிகாரிகளுக்கு ஏதாவது சன்மானம் வழங்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கத்திலே உள்ள பெரிய அதிகாரிகள் மட்டும் தான் இதில் வேலை செய்யவில்லை. கிராமத்திலே உள்ள கிராமாதிகாரிகள், பொதுமக்களும்கூட அதிக அக்கறை எடுத்துக் கொண்டு வெள்ளத் தடுப்பு வேலை செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கெல்லாம் என்ன சன்மானம் கொடுப்பது என்பதைப் பற்றியெல்லாம் பின்னால் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI T. SAMPATH : ஸார், இந்த அறிக்கையிலே ஜூலை மாதம் 7-ஆம் தேதி கோயிலடியில் உடைப்பு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த உடைப்பை முதல் முதலில் யார் பார்த்தார்கள்?

THE HON. SRI P. KAKKAN : முதன் முதலில் அரசாங்கத்தின் தரப்பிலே நமது மின்சார இலாகா அமைச்சர் அவர்கள், அவருடன் சென்ற இதர அதிகாரிகள் ஆகியவர்கள் பார்த்தார்கள். இதைத் தவிர வேறு யார் முதலில் பார்த்தார்கள் என்பது தெரியாது.

SRI M. KALYANASUNDARAM : கோயிலடி உடைப்பை முதன் முதலில் பார்த்துவிட்டு, அதற்குரிய அதிகாரிகளிடம் கூறியும், இரண்டு நாட்கள்வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? அப்படி இருந்தால், அதைப் பற்றிய விவரங்களை விசாரிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளம் எவ்வாறு வந்தது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். எதிர்பாராத விதத்தில் பெரு மழை ஏற்பட்டதன் காரணமாக இந்த வெள்ளம் ஏற்பட்டது. அவ்வாறு தண்ணீர் வேகமாக வந்ததன் காரணமாக கரைகள் உடைந்து விட்டது. அதனாலே கனம் அங்கத்தினர்

[23rd August 1961

அவர்கள் அதிகாரிகளைப் பற்றி சொல்லும்படியான விவரம் எனக்குத் தெரியாது. அதற்கு தனிக்கேள்வி போட்டால், பரிசீலனை செய்யப்படும்.

SRI M. KALYANASUNDARAM : 7-ஆம் தேதியே அபாய கரமான நிலை ஏற்பட்டிருந்தாலும், அன்றைக்கே தண்ணீர் திறந்து விடாததற்கான காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : திறந்து விடவில்லை என்று சொல்வதுஅவ்வளவு நல்லதல்ல. திறந்து விடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி திறந்து விட்டாலும், கிராண்ட் அணைக் கட்டில் 26,000 கியூசெக்ஸ் தண்ணீர் தான் போக முடியுமே தவிர, அதற்குமேல் தண்ணீர் போவதற்கு அதிலே இடம் கிடையாது.

SRI T. SAMPATH : இந்த உடைப்பை முதன்முதலில் தஞ்சாவூர் ஆர். டி.ஓ. அவர்களும், போலீஸ் டிபுடி சூபரிண்டெண்டு அவர்களும் பார்வையிட்டு, உடனே கலெக்டர் அவர்கள் மூலமாக சூபரிண்டெண்டு என்ஜினியர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டும், யாதொரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் தான், இந்த பெருத்த உடைப்பு ஏற்பட்டது என்று சொல்லப் படுகிறது. அப்படியானால் அதன் உண்மை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கோயிலடி உடைப்பு திடீரென்று அதிக வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக ஏற்பட்டது. 7-ஆம் தேதி காலையில் சுமார் 4 அல்லது 4-½ மணிக்கு இந்த உடைப்பு ஏற்பட்டது. உடனடியாக என்ஜினியர்களும், அது சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகளும் நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறார்கள். அன்றைக்கு அது இருந்த நிலைமையைப் பார்த்தபோது, எந்தவித நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அடைக்க முடியாத அளவுக்கு இருந்தது. ஏனெனில் 7-ஆம் தேதி காலை 7 மணிக்குப் பார்க்கும்போது இந்த உடைப்பு சுமார் 100 அடி அகலத்திற்குத் தான் இருந்தது. அதே தினம் பிற்பகல் 4 அல்லது 4½ மணி சுமாருக்கு கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும், நானும் ஏரியல் வியூவில் அந்த இடத்தைச் சென்று பார்த்தபோது அது 1,000 அடி அகலத்திற்குப் போய்விட்டது. அந்த அளவுக்குத் தண்ணீர் வேகமாக வந்து கொண்டிருந்ததைப் பார்த்தபோது, எந்தவித முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும் அந்த நேரத்தில் வெற்றி அடைந்திருக்க முடியாது. ஆகவே ஏதோ இது அதிகாரிகளால் புறக்கணிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலே இந்த கோயிலடி உடைப்பு ஏற்பட்டது என்று சொல்லும் பிரசாரம் உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, உடைப்புக்குக் காரணம் அதிகாரிகளின் கவனக் குறைவு தான் காரணம்

என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. அழகேசன் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்களே? இதை அரசாங்கம் கவனித்ததா? அதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்ததா?

THE HON. SRI P. KAKKAN: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் தன்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இப்போது இங்கே கொடுக்கப் பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தால், அதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM: ஜூலை 2-ம் தேதி அன்றே கிருஷ்ணராஜசாகரில் வழக்கத்திற்கு மேலாக, அதாவது 60,000 க்யூசெக்ஸ்க்கு மேலாக 1,16,000 க்யூசெக்ஸ்க்கு அதிகமாகவே தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்று தந்தி வந்திருந்தும் கூட, அன்றிருந்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் என்னென்ன எடுக்கப்பட்டன?

THE HON. SRI P. KAKKAN: என்னென்ன பாதுகாப்பு நட வடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அத்தனையுமே எடுக்கப்பட் டிருக்கிறது. நான் மேஜையின் மீது வைத்திருக்கும் ஸ்டேட் மெண்டை கனம் அங்கத்தினர்கள் பார்த்தால் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். 25-ம் தேதி இதைப்பற்றி விவாதிக்கும் பொழுது இதைப் பற்றி விவரமாகச் பேசலாம்.

SRI M. KALYANASUNDARAM: இந்த ஸ்டேட்மெண்டை படிப்பதற்கு நேரமே இல்லையே? . . .

DEPUTY SPEAKER: The hon. Members are expected to be in their seats half an hour before the House meets so that they could go through the papers laid on the table.

SRI S. LAZAR: ஆங்காங்கு உடைப்பைத் தடுப்பதற்கு ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், பொது மக்களுடைய பிரதிநிதிகள், சில பொதுமக்கள் இவர்களும் கூட அதில் தலையிட்டு அவர்களுக்கு செலவு ஏற்படக்கூடிய அளவுக்கு பல இடங்களில் வேலைகள் நடந்திருக்கின்றன என்பது அரசாங் கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி கையை விட்டு பணம் செலவு செய்தவர்களுக்கு பணம் திருப்பிக் கொடுக்கப் பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னபடி சில பொதுமக்கள் ஓரளவுக்கு அவர்கள் கையிலிருந்து பணம் செலவழித்து பொது மக்களுக்கும், பயிர்களுக்கும் பாது காப்பு அளிப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்தார்கள். பணம் கொடுக்கப்பட்டதா, இல்லையா என்பதற்கு என்னிடம் விவரம் இல்லை. அம்மாதிரி அவர்கள் பணம் கையைவிட்டு செலவழித்தது உண்மையானால், அதுபற்றி விசாரித்து தக்க ஏற்பாடு செய்யப் படும்.

[23rd August 1961

SRI N. K. PALANISAMI : சர்க்கார் உடனடியாக நிவாரண நடவடிக்கை எடுத்தபோதிலும், பல வருஷங்களாக இதுமாதிரி அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு, அதனுல் பழுதடைந்த கரை ஓரங்கள் சரியாக பழுது செய்யப்படாமல் இருந்ததால் வெள்ளம் அதிகமாகி சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப் படுகிறது. மேற்கொண்டு வெள்ளத்தை தடுப்பதற்கு சர்க்கார் என்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறுர்கள் ?

THE HON. SRI P. KAKKAN : வெள்ளம் 1924-ல் வந்ததைக் காட்டிலும் இப்பொழுது அதிகமாக ஏற்பட்டது. அந்த வெள்ளத் தினுடைய சக்தியை, ஓட்டத்தை யாராவது அதுபற்றி நினைத் திருந்தாலும் எதிர்த்திருக்க முடியாது. எதிர்பார்த்ததைவிட ஜாஸ்தியாக தண்ணீர் வந்துவிட்டது. அங்கே கொஞ்சம் விட்டாலும் கூட, அமராவதி, நொய்யல், பவானி தண்ணீரும் சேர்ந்து 3 லட்சம் க்யூசெக்ஸ்க்கு மேல் தண்ணீர் வந்துவிட்டது. இவ்வளவு அதிகமாக வெள்ளம் வரும் என்று எதிர்பார்த்து ஏற்கனவே அதிகமான ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏற்கனவே வெள்ளம் வந்த அளவைப் பொறுத்து கரைகளெல்லாம் உயர்த்தப் பட்டுத்தான் இருக்கின்றன. அதற்கும் மேல் எதிர்பாராமல் தண்ணீர் வந்து கரையை உடைத்தால் என்ன செய்ய முடியும் ? இயற்கையை மிஞ்சுவதற்கு யாரும் இல்லை என்று சொல்லு வார்கள். இனிமேல் மேற்கொண்டு இம்மாதிரி வெள்ளம் வந்தால் அதைத் தடுப்பதற்கு தக்க ஏற்பாடுகள் என்னென்ன செய்யப்படு கின்றன என்பது இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : மத்திய அரசாங்கத்தினிடமிருந்து வெள்ள நஷ்டத்திற்கு எவ்வளவு பணம் நமக்கு கிடைத்திருக் கிறது ? வெளி தேசங்களிலிருந்து ஏதாவது பணம் கிடைத்திருக் கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI S. M. ANNAMALAI : காவேரி ஆற்றின் இரு கரை களிலும் இதற்கு முன்னுல் மூங்கில், நாணல் போன்றவைகள் பயிரிட்டுக்கொண்டு வந்து, இப்பொழுது அந்த இடங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்டதன் காரணமாக, மராமத்து இலாகா சரிவர கண்காணிக்காததன் காரணமாக அவை அனைத்தும் நஞ்சை நிலங்களாக மாற்றப்பட்டதினுல், இந்த உடைப்பு ஏற்பட்டது என்பது உண்மையா ? அப்படியானுல் அதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

THE HON. SRI P. KAKKAN : கோவிலடி, திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் கரை ஓரங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப் படவில்லை. நாணல், சவுக்கை போன்ற மரங்களை எங்கெல்லாம் பி. டபிள்யூ. டி. நிலங்கள் இருக்கின்றதோ அங்கெல்லாம் வைப் பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு தான் இருக்கிறேம்.

23rd August 1961]

இம்மாதிரி வெள்ளம் வந்தால் அதைத் தடுப்பதற்கு மேலும் இந்த ஏற்பாட்டை அதிகமாகச் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

SRI K. VINAYAKAM : இந்த வெள்ளம் வந்ததன் காரணமாக காவேரி ஆற்றின் கரை உடைந்தபோது அந்த சேதத்தை மராமத்து செய்கின்ற வேலையில் ஈடுபட்ட நபர்களோடுகூட இந்த சட்டசபையைச் சேர்ந்த ஒரு மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஸ்ரீ. கே. பி. எஸ். மணி அவர்கள் ஈடுபட்டிருந்தபோது தவறி ஆற்றில் விழுந்துவிட்டதாகவும், பிறகு அவர் காப்பாற்றப் பட்டதாகவும் செய்தி படித்தோமே? இப்பொழுது அவர்கள் உடல் நலம் எப்படி இருக்கிறது? அவ்வாறு தியாகம் செய்தவர்களுக்கு ஏதாவது சன்மானம் தருவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா? (சிரிப்பு)

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லியபடி அவர்களுடைய தொகுதியிலிருந்து மக்களுடைய உயிரை காப்பாற்றுவதற்கு தன்னுடைய உயிரையே அர்ப்பணிக்கும் நிலைமையில் பணியாற்றினார்கள். நீந்தித் தான் அவர் உயிர் தப்பினார். நான் அந்தப் பகுதிக்கு சென்றிருந்த பொழுது மேலும் ஒரு நற்பணிக்காக அவர் போயிருந்தார்கள். அன்றையதினம் நான் அவரைப் பார்க்க முடியவில்லை. ஆள் நன்றாக இருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. G. MANICKAM : மேட்டூர் அணையை 10 அடி உயர்த்த வேண்டும் என்று சட்டசபையில் அநேக தடவைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு 10 அடி உயர்த்துவது வெள்ளத்தை தடுப்பதில் ஒரு முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். சர்க்காரின் கவனத்திற்கு இந்த விஷயம் கொண்டு வரப்பட்டதா? அவ்வாறு கட்டுவதற்குரிய பிரயத்தனம் சர்க்காரால் மீண்டும் எடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : இனிமேல் செய்யவேண்டிய திட்டங்களில், மேட்டூர் அணையின் உயரத்தையும் 130 அடி வரைக்கும் உயர்த்துவது பற்றி பரிசிலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். இந்த அறிக்கையிலே அதுபற்றி கூறப்பட்டிருக்கிறது. 25-ம் தேதி அதுபற்றி பேசலாம்.

SRI M. D. THIAGARAJA PILLAI : இப்பொழுது மீண்டும் வெள்ளம் வந்து வடவாற்றில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இங்கிருந்து அவசரமாக உத்தரவுகள் போடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : நான் நேற்று பத்திரிகையில் பார்த்தேன். உடனடியாக அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Some hon. Members rose . . .

[23rd August 1961

DEPUTY SPEAKER: I have allowed sufficient number of supplementaries on this question. Moreover, the House will have a discussion on the flood situation on Friday, the 25th August 1961. So, we shall now pass on to the next question.

Sub-Registrar's Office

* 1341 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை இடங்களில் சப்-ரிஜிஸ்திரார் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படும்?

(இ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுகா கடலாடியில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (அ) The question of opening the Sub-Registry offices is not linked with the Five-Year Plan.

(இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI: பல இடங்களில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகங்கள் தேவை என்று மக்கள் சொல்லுகிறார்கள். சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகங்கள் ஆரம்பிப்பது மக்கள் ஜனத்தொகை அடிப்படையில் ஆரம்பிக்கப்படுகிறதா அல்லது விஸ்தீரணத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்படுகிறதா? இதைத் திட்டவட்டமாக பரிசிலனை செய்து மக்களுக்கு அதிக சிரமமில்லாமல் இருக்கும்படி அதிக தூரம் வராதபடி மக்கள் ஜனத்தொகையின் அடிப்படையில் புது அலுவலகங்கள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH: புது சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதிலே சமீப காலம் வரைக்கும் கொஞ்சம் தேக்கம் இருந்தது. ஆனால் இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து மக்களுடைய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் புது நிலையங்கள் திறக்கப்படவேண்டும் என்று முடிவு எடுத்து, இந்த வருஷம் 2, 3 ஜில்லாக்களில் 5, 6 புது ஆபீஸ்கள் திறந்திருக்கிறோம். ஆகையால் இனிமேல் தொடர்ந்து எங்கே தேவை இருக்கிறதோ அதை பூர்த்தி செய்யக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

Clash between students and transport workers

* 1342 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் பஸ் தொழிலாளர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் கைகலப்பு சச்சரவு ஏற்பட்டு பஸ் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டதா?

(இ) இதற்கு காரணமென்ன?

(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?